ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1877/56 - 2014 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2014.08.29

1877/56 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பிலக்கம்: அ.பி.கோ/3/1/அ/119.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின்

குறிப்பிலக்கம்:4/3/9/2011/WS/244.

பொது மக்களின் தேவைக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் எண்ணியிருப்பதால், காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பந்தியின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணத்தில், நுவரெலியா மாவட்டத்தில், அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவில், அம்பகமுவ கோரளையின் சிறு பிரிவில், டிக்கோயா கிராமத்திலமைந்த, நில அளவை நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட நு. 2878 ஆம் இலக்கமும் 2014.06.30 ஆந் திகதியுமிடப்பட்ட ஆரம்ப வரைபடத்தின் காணத்துண்டிலக்கம் இலக்கம் 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 'டிக்கோயா தோட்டம் தரவெல கீழ் பிரிவு' என்னும் காணியில் சுமார் 0.0127 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணி.

**துண்டு இல. 1:**

**காணியின் பெயர்: 'டிக்கோயா தோட்டம் தரவெல கீழ் பிரிவு'விஸ்தீரணம்: 0.0127 ஹெக்டயார்.**

எல்லைகள்:-

வடக்கு: டிக்யோயா தோட்டம் (TP 45507); கிழக்கு: டிக்யோயா தோட்டம் (TP 45507) மற்றும் பாதை (வீதி அபிவிருத்தி அதிகார சபை); தெற்கு: பாதை (வீதி அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் டிக்யோயா தோட்டம் (TP 45507); மேற்கு: டிக்யோயா தோட்டம் (TP 45507).

**உரிமைகோருபவரின் பெயரும் முகவரியும்**

1.வரையறுக்கப்பட்ட வடவல பயிர்ச்செய்கை கம்பனி
இல. 60, தர்மபால மாவத்தை.
கொழும்பு 03.

மேற்குறிப்பிட்ட காணிகளுக்கு உரிமைகோருபவரோ அல்லது வேறு தொடர்புகள் இருப்பதாக கூறும் சகலரும் தாமாகவோ அல்லது அவர்களின் கடிதம் மூலம் அதிகாரம் உள்ளவர்களாகவோ இருப்பின் 2014 ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னைச் சந்திக்க வேண்டும்.

மேலும், 2014 செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் அக்காணியையோ அல்லது அக்காணிக்கு தொடர்புடைய தத்தமது உரிமைகளின் தன்மைகளையும் அக்காணியை எடுத்துக் கொள்ளுதலுக்கான நட்டஈடு கோருவதற்குரிய காரணங்கள் பற்றிய விபரங்களையும் நட்டஈட்டுத் தொகை, அத்தொகையை கணக்கீடு செய்த முறையையும் கடிதமூலம் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்க வேண்டும். அவற்றை உரிமைகள் கோரல் பற்றிய ஒப்பனை பரிசீலனை செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

எச். எம். சி. கே. ஹேரத்,
பிரதேச செயலாளர்,
அம்பகமுவ கோரளை,
கினிகத்ஹேனை.

அம்பகமுவ கோரளை பிரதேச செயலகம்,
கினிகத்ஹேன,
2014, ஓகத்து 27.

9 - 476

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.